**செய்தி வெளியீடு எண்:659** **நாள் : 11.12.2015**

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை **28.10.2015** அன்று துவங்கி அதன் பின்னர் கனமழை பொழிந்ததன் காரணமாக அம்மாவட்டங்களில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு அதிக அளவு பாதிப்புக்கு உள்ளாயின. அம்மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவ / மாணவிகள் தங்களது கல்விச் சான்றிதழ் மழை வெள்ளத்தில் இழந்திருப்பின் அவற்றின் நகல்களை பெறுவதற்கு ஏதுவாக **14.12.2015** முதல் இரண்டு வாரங்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தி மாணவ/மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று ஒரு வார காலத்திற்குள் கல்விச் சான்றிதழ் நகல்களை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றிருந்தாலும், மழை வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளான மேற்கண்ட நான்கு மாவட்டங்களில் மாணவ/மாணவிகள் தங்களது கல்விச் சான்றிதழ்களை மழை வெள்ளத்தில் இழந்திருப்பின் அவற்றின் இரண்டாம்படி சான்றிதழ்கள் (Duplicate Certificate) பெற சென்னை காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் நடைபெறும் சிறப்பு முகாமிற்கு சென்று கட்டணமின்றி விண்ணப்பிக்கலாம்.

இந்த அரிய வாய்ப்பினை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாணவ/மாணவியர் அனைவரும் பயன்படுத்தி கொள்ளுமாறு இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை கேட்டுக் கொள்கிறார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**